# எல்லார்க்கும் நன்றாம் பணிதல்

சிறந்தோங்கி வளர்ந்துவரும் இன்றைய நவநாகரிக உலகில் மனிதன் தன்னால் இயன்றவரை தன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு ஈத்துவக்கும் இன்பம் பெற்று வெகு சிறப்பாகவே வாழ்ந்தாலும் தனக்கே உரிய சில நற்பண்புகளை இழந்து கொழுகொம்பற்ற பசுங்கொடியைப் போன்று காணப்படுகிறான். ஆம்! மனிதனுக்கு உரிய பணிவன்பினை இழந்து வருகிறான் இன்றைய மனிதன். இதனால்தானோ என்னவோ பணிவன்பு இயக்கம் ஒவ்வோர் ஆண்டும் நம் நாட்டில் நடைபெற்று வருகிறது! பணிவன்போடு அமைந்த அன்றைய வாழ்க்கை நிலை மாறி இன்று ஒவ்வொருவரும் பணிவன்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதை நினைவூட்டும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நான்கு மொழிச் சமுதாயப் பின்னணியில் வாழும். நமக்குப் பணிவன்பு நம் கண்களைப் போன்று முக்கியமானதொன்றாகும். முதலில் அடங்கி நடக்கும் பண்பாகிய பணிவு, பிறகு அன்பான ஒரு சிரிப்பு அல்லது பேச்சு ஆகிய இரண்டும் சேர்ந்ததுதான் பணிவன்பாகும்.

**“அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை”**

என்பதற்கிணங்கப் பணிவன்பின் முதற்படி பொறுமையாகும். பல இனமக்களுடன் கூடி வாழும்போது நமக்குப் பொறுமை மிகமிக அவசியமாகும். ஆத்திரமூட்டும் நிலையிலும் சினத்தைக் காத்துப் பணிவன்புடன் நடந்துகொள்வதால் நாம் தாழ்ந்துவிடுவதில்லை. ‘பொறுத்தார் பூமி ஆள்வார்’, என்பது சான்றோர் வாக்கு என்பதை நினைவிற்கொள்ளல் வேண்டும்.

**“அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்”**

எனவே, அடக்கம் நமக்கு உயிர்போன்றது. அடக்கத்தை நாம் பலவழிகளில் கடைப்பிடிக்கலாம். பெற்றோரிடத்தில் அடக்கம், ஆசிரியரிடத்தில் அடக்கம், மற்றும் மூத்தவர்களிடம் அடக்கம் காட்டுவது அவசியம். மேலும், சட்டத்துக்கு நாம் அடங்கி நடக்க வேண்டும்.

துயர் மிகுந்த காலத்திலும் பணிவன்பு குறையாமல் வாழ்வதே மனித மாண்பாகும். முன்னேற்றப் பாதையிலே அடி வைத்திருக்கும் நாம், பணிவன்பைக் கடைப்பிடிக்கவில்லையெனில் 25 ஆண்டுகளாகப் பாடுபட்டு அடைந்துள்ள முன்னேற்றம் சிதறிப் போய்விடும் நிலை வரலாம். படிப்பில்லாத பாமரர்கள் மத்தியில் பணிவன்பின் இன்றியமையாமை பற்றி எடுத்துரைப்பது கடினம். ஆனால், இன்று நாமோ கல்வி கற்றுள்ளோம் எனவே, நாளைய தலைவர்களாகப் போகும் இன்றைய இளைஞர்களின் மனத்தில் பணிவன்பு பசுமரத்தாணிபோல் பதிய வேண்டுமல்லவா?

பணிவன்பை நம் வாழ்க்கை முறையாக்கிட வேண்டும். உண்மையில் பணிதல் அப்படி ஒன்றும் கடினமான செயலன்று. நாம் அனைவரையும் மதித்து நடக்கிறோம். அதாவது அனைவருக்கும் மரியாதை கொடுத்து அவர்களின் மரியாதையைப் பெறுகிறோம்.

1978-ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் தேதி ஆரம்பிக்கப்பட்ட பணிவன்பு இயக்கம் இப்போதும் தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பள்ளிகளிலும், அலுவலகங்களிலும், பொது இடங்களிலும் பணிவன்பைக் கடைப்பிடிக்குமாறு பொதுமக்களுக்கு வலியுறுத்தப்படுகிறது. ஆகவே, பணிவன்பை நாமும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். ''தயவு செய்து'', ''நன்றி'', ''வணக்கம்'', போன்ற சொற்களை நம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தி எல்லாரிடமும் பணிவன்பாக நடந்துகொள்ள வேண்டும். இன்சொல் பல இருக்க வன்சொல் பேசி மற்றவர்களைப் புண்படுத்துவது அழகல்ல. உள்ளத்தின் அழகே உண்மை அழகு ஆகும். எனவே, நம்முடைய பேச்சிலும் செயலிலும் நாம் பணிவன்பைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மகுடிக்கு மயங்கும் நாகம்போலப் பணிவன்பிற்கு மக்கள் கட்டுப்படுவர் என்றால் மிகையாகாது. பணிவன்பினால் மக்களிடையே நட்பு வளர்வது உறுதி. அதனால், நம் நாட்டுக்கும் நன்மைதானே? நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கத்தையும், இன்னா செய்தாருக்கும் இனியவே செய்தலையும், இன்னபிற நற்பண்புகளையும் நாம் பின்பற்றினால் நம்மிடையே பணிவன்பு இயல்பாகச் சிறந்தோங்கி வளரும் என்பது திண்ணம்.

ஒற்றுமையுணர்வுடன் கூடிய ஒன்றுபட்ட சமுதாயமே நம் நாட்டுக்குத் தேவை. அச்சூழலில் அமையப்பெற்ற சமுதாயத்தை உருவாக்குவது இன்றைய இளைஞர்களாகிய நம் கையில்தான் உள்ளது, பணிவன்பான சிங்கப்பூரர்கள் என்று மற்ற நாட்டார் நம்மைப் புகழும் அளவுக்கு நாம் நடந்துகொள்ள வேண்டும்.

நான்கு இனமக்கள் வாழும் சிங்கப்பூரில் ஒருவரோடு ஒருவர் சுமுகமாகவும் புரிந்துணர்வோடும் வாழப் பணிவன்பு வழிவகுக்கும். பணிவான அன்பு நம்மிடம் இல்லையெனில் நாம் மாக்களுக்குச் சமமாவோம். எனவே, இன்றைய இளைஞர்களாகிய நாம் பணிவன்பை நம் வாழ்க்கை முறையாக்கி வளமான, வலிமை மிக்க சிங்கையை உருவாக்க ஒன்றிணைந்து உழைப்போமாக!

**சி.பன்னீர் செல்வம்**
**புகுமுக வகுப்பு 2 (1984)**
**பீட்டி உயர்நிலைப் பள்ளி**